# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**புதுக்கோட்டை மாவட்டம், அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை திரு.எஸ்.தனராசு.பி.இ.,**

**ந.க.எண். 144/2021/புமா** **நாள்.17.02.2022**

திருவள்ளுவர் ஆண்டு2053, பிலவ வருடம், மாசி திங்கள் 05-ஆம் நாள்

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் - அறந்தாங்கி வட்டம்/ஊராட்சி ஒன்றியம், அழியாநிலை ஊராட்சி/கிராமம் சர்வே எண்கள்:335/1, 2A1A, 2B-ல் 16.08.38 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை

1. நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3084/2021/TCP-6, நாள்.01.02.2022.
2. மனுதாரர் திரு.R.பாலசண்முகம், செல்வி.R.சாருஹாசினி மற்றும் திருமதி.K.ரெத்தினம் அவர்களின் விண்ணப்பம் நாள்.04.02.2021.
3. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.144/2021/புமா, நாள்.11.02.2021.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ நாள்.24.12.2020.
5. அரசாணை எண.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.04.05.2017.
7. நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/BA2 நாள்.06.11.2019.
8. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
9. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை UD4(3), நாள்.23.09.2020.
10. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை UD4(1), நாள்.09.12.2020.
11. அரசு கடிதம் எண்.19113, நவ4(3), 2017-1. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.30.08.2017.
12. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண். 4367/2019-TCP-2, நாள்.11.10.2021.
13. மனுதாரர் கூராய்வு கட்டணம் மற்றும் நன்னிலை வரி கட்டணம், செலுத்தப்பட்ட இரசீது இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள். 04.02.2021, 16.02.2022.
14. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.320/2022-TCP-3, நாள்.07.01.2022.

******

பார்வை 2-ல் சுட்டிய மனுதாரரின் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேசம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டு, மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் மனுதாரரால் தானமாக பத்திர எண்.3785/2021, நாள்.25.10.2021 மற்றும் 4066/2021, நாள்.16.11.2021-ல் ஒப்படைக்கப்பட்டதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் இசைவு வழங்கப்பட்டுள்ளது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்பட்டு, மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.இ.எண்.10/2022** என நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் எண்ணிடப்பட்ட 2 அசல் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கபட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நிலஅளவைத் துறைக்கும். தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் தானபத்திர அசல் ஆகியவை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. (a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local Body shall be issued to the applicant(s) directly.
   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாதநிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

..3..

வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11-ல் கண்ட அரசு கடிதத்தின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை, வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or buildings, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority–ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பின் கீழ் செலுத்தப்பட்ட பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>அரசு கணக்கு தலைப்பு</u>
0217 – Urban Development – 60 Other Urban Development Schemes – 800 Others Receipts – AS Receipts Under Land use conversion charges - 227 Non Taxation fees -09 collections (DPC.0217 60 800 AS 227 09)

6. மனைகளுக்கான நன்னிலைவரி மற்றும் இதர கட்டணங்களை துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

7. பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கொடி நாள் நிதி தொகையானது "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வரைவோலை மனுதாரரிடமிருந்து பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

17/2/22

<u>இணைப்பு</u>
1.வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 தொகுப்பு)
2. தானபத்திர எண்.3785/2021 மற்றும் 4066/2021-ன் அசல்கள்

பெறுநர்
தலைவர்,
அழியாநிலை ஊராட்சி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல்**

1. உதவி இயக்குநர் (Survey),
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 002.
} **வரைபடத்துடன்**

2. திரு.R.பாலசண்முகம்,
செல்வி.R.சாருஹாசினி மற்றும்
திருமதி.K.ரெத்தினம்
கதவு எண்.3/340,
முத்துபட்டிணம் கிராமம்,
எஸ்.குளவாய்பட்டி அஞ்சல்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.
} (உள்ளாட்சி மூலமாக)

அழியாநிலை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

ந.க எண் 01 / -- /2022/ அ.ஊ நாள் : 18/04/2022

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - நகர் ஊரமைப்புத்துறை - புதுக்கோட்டை மாவட்டம் - அறந்தாங்கி வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - அழியாநிலை ஊராட்சி கிராமம் - சர்வே எண்கள் 335/1, 2A 1A , 2B ஆகியவற்றில் மொத்த பரப்பு 1,60,838 - ச .மீ ( 39.72 ஏக்கரில் ) உத்தேச குடியிருப்பு மனைப் பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியது - மனைப்பிரிவு அங்கீகாரம் - உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை :

1. சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் ந .க எண் : 3084/2020 நாள்
2. புதுக்கோட்டை மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் உத்தரவு எண் 144 / 2021 / பு .மா நாள் 17.02.2022.
3. திரு . R . பாலசண்முகம் மற்றும் இருவர் கதவு எண் 3 / 340 முத்துப்பட்டிணம் கிராமம் என்பவரது விண்ணப்பம் நாள் : .2.2022
4. அழியாநிலை ஊராட்சி மன்றத் தீர்மாணம் எண் /04 / 2022 -2023 நாள் 18-04- 2022
5. அரசாணை எண் 79. வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந .வ 4 (3) நாள் 04.05.2017
6. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்
7. பணம் செலுத்துச் சீட்டு நாள்

உத்தரவு :

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அழியாநிலை கிராமம் சர்வே எண்கள் 335/1, 2A 1A மற்றும் 2B -ல் கண்ட 1,60,838 ச .மீ ( 39.72ஏக்கர் ) பரப்பளவு கொண்ட நிலத்தில் உத்தேச மனைப் பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி (துணை இயக்குநர் / மா . ந .ஊ .அ - பு .மா எண் 144/2021/பு .மா ) பார்வையில் காணும் உத்தரவு வாயிலாக புதுக்கோட்டை மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது

புதுக்கோட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் தொழில் நுட்ப அனுமதியின் படி பிரிக்கப்பட்ட மொத்த பரப்புளவு 1,60,838 ச .மீ ( 39.72ஏக்கர் ) மனைப் பிரிவில் உள்ள சாலைகளின் பரப்புளவு 47685.34 ச .மீ மீதமுள்ள மனைகளின் பரப்புளவு 113152.66 ச .மீ . ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த மனைகள் 575 மட்டும்.

பார்வை 3 ல் கண்ட கடிதம் வாயிலாக மனுதாரர் ஷ பிரிக்கப்பட்டுள்ள 575 மனைகளை வரன்முறைப் படுத்தி உத்தரவு வழங்கிடக் கேட்டுள்ளரர் .

பார்வை 5ல் காணும் அரசாணையின் படி ரூ . 20,000/- நிலப் பயன் மாற்ற தொகையாக 3% உரிய அரசு தலைப்பில் / 4 / 2022ம் தேதியன்று செலுத்தியுள்ளார் .

மேலும் மனுதாரரால் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட வசதிகள் 2019 விதி 47(11) ன் படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கான வளர்ச்சிக் கட்டணம் (செலவுத் தொகை ) ( தற்போதைய வழிகாட்டி மதிப்பின் படி ஏக்கர் ஒன்றுக்கு 55,000 என உள்ளதன் அடிப்படையில் ) 39.72 ஏக்கர் நிலத்திற்கான மொத்த மதிப்பு ரூ . 21,84,600 ல் 3% மதிப்பான ரூ . 65538/- (மொத்தமுள்ள 575 மனைகளுக்கு ) மற்றும் நில உபயோக மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ . 1000/- ( கூராய்வு கட்டணம் ) ஆகியவற்றை ஊராட்சி மனைப் பிரிவு வளர்ச்சி கட்டணக் கணக்கில் ஊராட்சி வங்கி சேமிப்பு கணக்கு எண் A/C I - 29850100002 B.O.B. Aranthangi கிளையில் மனுதாரரால் செலுத்தப்பட்டு சலான் நகல் . இணைக்கப்பட்டுள்ளது .

மனுதாரரால் இம்மனைப்பிரிவில் உள்ள பொது பூங்கா I,II - 11407.64 ச. மீ (10.08%) உள்ளாட்சி உபயோகம் 571.69 சமீ (0.50%) மற்றும் TANGEDCO க்கு 571.69ச.மீ (0.50%) ஆகியவற்றை அழியா நிலை ஊராட்சிக்கு அறந்தாங்கி சார் பதிவாளர் பத்திர பதிவு எண் 3785/2021 நாள் 25.10.2021 மற்றும் ஆவண எண் 4066/2021 நாள் 17.11.2021 ஆகியவற்றின் வாயிலாக தானப்பத்திரம் செய்து தரப்பட்டுள்ளது .

பார்வை 3 இல் காணும் அழியாநிலை ஊராட்சி மன்ற தீர்மான எண் 04/2022 நாள் 18-04-2022ல் பார்வை 1 ல் கண்ட உத்தரவுப்படி மனைகளாக பிரிக்கப்பட்டு உத்தேச தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள 575 (நலிவடைந்த பிரிவுகளுக்கான மனைகள் 175, சாதராண மனைகள் 400 ஆகியவற்றிக்கு கீழ்கண்ட

நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது .ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020 ன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெற வேண்டும்.

2. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள் , அளவுகள் , பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது .

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப் படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்

4. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ , குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்ட வரைப்பத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCBR 2019ல் குறிப்பிட்டுள்ள Residential useல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்புத்துறையின் முன் அனுமதி பெற்ற பின்னரே உள்ளாட்சியால் அனுமதி வழங்கப்படும்.

6. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்திருந்தால் , கம்பிப் பாதையை சாலை விளிம்பிற்கோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைப்படத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும் .

7. மனைப் பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்

8. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும் .

9. மனைப் பிரிவில் அமையும் மனையிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்

10. மனுதாரர் , துணை இயக்குனர் ,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , புதுக்கோட்டை மாவட்டம் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ம .ந.ஊ.அ / ( புதுக்கோட்டை மாவட்டம்) எண் 144/2021 / பு.மா. என ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் /விடுதலின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 0.60மீ X 1.20மீ அளவிற்கு குறையாமல் நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண் மற்றும் நாள் தெளிவாகக் குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும் .

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது .எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது

12. நில உரிமைகள் குறித்த சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு planning permission / concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப் பிரிவிற்கு வழங்கப்பட்ட planning permission /

concurrence ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புத்துறையால் ரத்து செய்யப்படும் .

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் பொழுது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் .

தலைவர்
ஊராட்சி மன்றம்
அழியாநிலை ஊராட்சி
18-04-2022

ஊராட்சி மன்றத்தலைவர்
அழியாநிலை ஊராட்சி
அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

திரு .R. பாலசண்முகம் மற்றும் இருவர்
3/340, முத்துப்பட்டிணம் (கி)
குளவாய்பட்டி அஞ்சல்,
ஆலங்குடி தாலுகா , புதுக்கோட்டை மாவட்டம் .

நகல் :

1. சார்பதிவாளர் , சார்பதிவாளர் அலுவலகம் , அறந்தாங்கி .
2. துணை இயக்குநர் , நகர் ஊரமைப்புத்துறை, புதுக்கோட்டை.
3. வட்ட துணை ஆய்வாளர் , வட்டாட்சியர் அலுவலகம் , அறந்தாங்கி .
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி . ஊ ), அறந்தாங்கி .



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate